அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின 13 நிருபங்களில் இந்த ஒரு நிருபம் மட்டுமே பவுல் தன் நண்பருக்கு எழுதும் ஒரு தனிப்பட்ட கடிதம் ஆகும். இதை ஒரு சிபாரிசுக் கடிதம் என்று கூறலாம். ஒருவர் இன்னொருவருக்காக பரிந்துரைக்கும் கடிதம். பிலேமோன் என்பவருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஒநேசிமு என்பவரைப் பற்றி பரிந்துரைக்கும் கடிதம் இது. புதிய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 18 ஆவது புத்தகமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் ஒரே அதிகாரத்தைக் கொண்ட 4 புத்தகங்களில் இதுவும் ஒன்று.

அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தை அறிவித்ததின் காரணமாக ரோம் பட்டணத்தின் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த போது கி.பி. 60ஆம் ஆண்டில் இந்த நிருபத்தை எழுதினார். கொலோசெயர், எபேசியர், பிலேமோன் ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில் எழுதப்பட்ட நிருபங்களாகும்.

பின்னணி :

பிலேமோன் என்பவர் வீட்டில் ஒநேசிமு என்பவன் அடிமையாய் இருந்தான். அந்நாட்களில் அடிமைத்துவம் சமுதாய வழக்கமாய் இருந்தது. ரோம் சாம்ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கான அடிமைகள் இருந்தார்கள். ஒநேசிமு, பிலேமோன் வீட்டில் திருடி விட்டு வீட்டை விட்டு ஓடிவந்து விட்டான். கொலோசெ பட்டணத்தை விட்டு ரோம் பட்டணத்திற்குச் சென்றான். தெய்வாதீனமாக அவன் அப்போஸ் தலனாகிய பவுலை சந்திக்க நேர்ந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் அவனுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தை சொல்லியதால் ஒநேசிமு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசியானான்.

பிலேமோன், ஒநேசிமு இவர்களுக் கிடையே ஏற்பட்ட உறவு முறிவைச் சரிப்படுத்த பவுல் எடுத்துக்கொண்ட முயற்சியை இந்த நிருபத்தில் காணலாம். அக்காலத்திலிருந்த சமுதாய வழக்கத்தின்படி ஒநேசிமு செய்த தவறுக்காக பிலேமோன் அவனைக் கடுமையாக தண்டிக்கலாம் அல்லது கொலை கூடச் செய்யலாம். ஆனால் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் படி பவுல் மன்றாடுகிறார். அன்பின் அடிப்படையில் கனிவோடு கட்டாயப் படுத்துகிறார். இந்த நிருபத்தில் பவுலின் கனிவான கிறிஸ்தவப் பண்பும் அணுகுமுறையும் வெளிப்படுகிறது.

பிலேமோன் என்பவர் வசதியும், செல்வாக்கும் நிறைந்தவராய் கொலோசெ பட்டணத்தில் வாழ்ந்து வந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவின் விசுவாசியானார். பிலேமோன் மனைவி அப்பியாள் என்பவர். அவருடைய மகன் அர்க்கிப்பு சுவிசேஷ ஊழியனாக இருந்தார்.

பகுப்பாய்வு:

வசனம் 1-3 வாழ்த்து

வசனம் 4-7 பிலேமோனுக்கு பாராட்டு பிலேமோனின் பண்புகள்

வசனம் 8-17 பவுலின் மன்றாட்டு

வசனம் 18-21 பவுலின் உறுதிமொழி

வசனம் 22-25 முடிவான வார்த்தைகள்

ஒநேசிமு என்றால் "பயன்படுதல்" என்று பொருள். ஒரே அதிகாரத்தைக் கொண்ட 25 வசனங்கள் உள்ள இப்புத்தகம் தமிழ் வேதாகமத்தில் ஒரே பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. (புதிய ஏற்பாட்டில் பக்கம் 297) வாய்விட்டு மிதமான வேகத்தில் வாசித்தால் 5 நிமிடங்களில் இப்புத்தகத்தை வாசித்து விடலாம்.


ஒரே தடவையில் அடுத்தடுத்து மூன்று தடவைகள் இப்புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்.

முக்கிய வசனங்கள் : 18, 20

அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும் உம்மிடத்தில் கடன் பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும். ஆம் சகோதரனே கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜன முண்டாகட்டும். கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்கள் கால வரிசைப்படி

நிருபத்தின் பெயர்	எழுதப்பட்ட இடம்	எழுதப்பட்ட காலம்
Iதெசலோனிக்கேயர்	கொரிந்து	கி. பி.52-53
IIதெசலோனிக்கேயர்	கொரிந்து	கி. பி. 53
I கொரிந்தியர்	எபேசு	கி. பி. 57
IIகொரிந்தியர்	மக்கெதோனியா	கி. பி. 57
கலாத்தியர்	கொரிந்து	கி. பி. 57 -58
ரோமர்	கொரிந்து	கி. பி. 58
எபேசியர்	ரோம்	கி. பி . 60
தீத்து	கொரிந்து	கி. பி. 63
கொலோசெயர்	ரோம்	கி. பி . 63
பிலேமோன்	ரோம்	கி. பி. 63
பிலிப்பியர்	ரோம்	கி. பி. 64
I தீமோத்தேயு	ரோம்	கி. பி. 66
II தீமோத்தேயு	ரோம்	கி. பி. 67



ஒவ்வொரு நிருபத்திலும் உள்ள முக்கிய செய்தியின் ஆதார வார்த்தை

ரோமர்	நீதி
I கொரிந்தியர்	ஞானம்
II கொரிந்தியர்	ஆறுதல்
கலாத்தியர்	விசுவாசம்
எபேசியர்	ஆசீர்வாதம்
பிலிப்பியர்	சந்தோஷம்
கொலோசெயர்	நிறைவு
Iதெசலோனிக்கேயர்	கிரியை செய்தல்
IIதெசலோனிக்கேயர்	காத்திருத்தல்
I தீமோத்தேயு	ஊழியம் செய்தல்
II தீமோத்தேயு	சுவிசேஷத்தைக் காத்துக்கொள்ளுதல்
தீத்து	நற்கிரியை
பிலேமோன்	மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல்

ரோமர், I கொரிந்தியர், II கொரிந்தியர், கலாத்தியர்
கிறிஸ்துவும் சிலுவையும்

எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர்
கிறிஸ்துவும் திருச்சபையும்

I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர்
கிறிஸ்துவும் வருகையும்

ஒவ்வொரு நிருபத்திலும் கிறிஸ்து நமக்கு எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்று வெளிப்படுத்தப்பட்டிருப்பதை மனதில் கொண்டு வாசியுங்கள்.

ரோமர்	கிறிஸ்துதேவனுடைய வல்லமை
Iகொரிந்தியர்	கிறிஸ்து தேவனுடைய ஞானம்
II கெரிந்தியர்	கிறிஸ்து தேவனுடைய ஆறுதல்
கலாத்தியர்	கிறிஸ்து தேவனுடைய நீதி
எபேசியர்	கிறிஸ்து தேவனுடைய ஐசுவரியம்
பிலிப்பியர்	கிறிஸ்து தேவனுடைய பெலன்
கொலோசெயர்	கிறிஸ்து தேவனுடைய நிறைவு
Iதெசலோனிக்கேயர்	கிறிஸ்து தேவனுடைய வாக்குத்தத்தம்
IIதெசலோனிக்கேயர்	கிறிஸ்து தேவனுடைய பிரதிபலன்

அப்போஸ்தலனாகிய பவுல் சபைகளுக்கு எழுதின நிருபங்கள் 3 பிரிவுகளில் அமைந்திருப்பதைக் கவனியுங்கள். ஒவ்வொரு பிரிவின் முக்கியச் செய்தியைக் குறித்துக் கொள்ளுங்கள்.